**கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் - 2016**

கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 5428–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் II(பீ)(3) ஆம் பிரிவு மற்றும் 2016 யூலை 20 ஆம் திகதிய 5800–எல்கே ஆம் இலக்க மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையில் பங்குபற்றல் நகர பிராந்தியங்களில் தெரிவுசெய்யப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடவசதிகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். ஆகையால், செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பங்குபற்றல் நகர பிராந்தியங்களாக கண்டி நகரமும் காலி நகரமும் தெரிவு செய்யப்பட்டிருந்தன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஆரம்ப மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 25,162.48 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 95 மில்லியன் (ஐ.அ.டொலர் 192.08 மில்லியன்) ஆனதுடன் அதில் ரூபா 19,257 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 147 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மேலும், மேலதிக நிதியளிப்பிற்கான 2016 யூலை 20 இன் 5800–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், யாழ்ப்பாண நகரத்திலுள்ள அபிவிருத்தி வேலை நோக்கத்திற்காக ரூபா 7,975 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 39.90 மில்லியனை (ஐ.அ.டொலர் 65 மில்லியன்) ஒதுக்கீடு செய்வதற்கு சர்வதேச அபிவிருத்திச் சங்கம் உடன்பட்டிருந்தது.

செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 மே 05 இல் தொடங்கியிருந்ததுடன் கடனின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட வேலை 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மேலதிக நிதியளித்தல் ஒழுங்குகளின் கீழ் யாழ்ப்பாண நகரத்திலுள்ள அபிவிருத்தி வேலைகளின் நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன்கள் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) நிதியளித்தல் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்தரைகள்

### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 10 ஆம் பிரிவால் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய இடைநிலை பெறுபேற்றுக் குறிகாட்டிகளின் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 33 (ஊ) பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட கொள்வனவுச் செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக்கொண்டு செயற்திட்டத்தின் கொள்வனவு நடவடிக்கைகள் மீதான செயன்முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு இயலுமானதாக செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 24 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறு தயாரிக்கப்பட வேண்டிய கொள்வனவு நிர்வாகக் கைநூல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கைகளின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | | | | | | | |
| - 5428 எல்கே | 147.00 | 19,257.00 | 3,960.00 | 8.07 | 1,177.99 | 11.00 | 1,563.58 |
| - 5800 எல்கே | 65.00 | 7,975.00 | - | - | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | 45.08 | 5,905.48 | 1,850.00 | 3.08 | 446.99 | 4.09 | 559.72 |
| | **257.08** | **33,137.48** | **5,810.00** | **11.15** | **1,624.98** | **15.09** | **2,123.30** |

(அ) மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், கடன் வழங்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 19,257 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 147 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், மொத்த ஒதுக்கீட்டின் 07 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,563.58 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 11 மில்லியன் தொகை மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்ததிலிருந்து 02½ ஆண்டுகள் கடந்த பின்னர் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும், செயற்திட்டக் காலப்பகுதியினுள் இலக்குகளை அடைவதற்காக பொறுப்புக்களை நிர்ணயித்து செயற்திட்டக் காலப்பகுதி முழுவதையும் மேவுகை செய்து மாதாந்தம், காலாண்டு மற்றும் அரையான்டு போன்றன ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டி விரிவான விபரமான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்துகின்றதன் செயன்முன்னேற்றம் மெதுவானதாக இருந்தது.

(ஆ) செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 11 ஆம் பந்தியின் மூலம் வேண்டப்பட்டவாறு செயற்திட்ட வேலைப் பட்டியலை அடிப்படையாகக்கொண்டு மீளாய்வாண்டிற்கான விபரமான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,810 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில், ரூபா 1,624 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், கண்டி மற்றும் காலி நகரங்களில் தெரிவு செய்யப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடவசதிகளை முன்னேற்றுவதற்காக சில நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் யாழ்ப்பாண நகரத்தில் மேலதிக நிதியளிப்பு ஒழுங்குகளின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி வேலைகள் 2016 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டங்கள் மீளாய்வாண்டின் போது நடைபெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும், உரிய மாநகர சபைகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பவற்றின் பிரதிநிதிகள் நிரந்தர அடிப்படையில் மேற்குறிப்பிடப்பட்ட குழுக்களுக்காக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மேலே குறிப்பிடப்பட்ட முகவர்களுக்கிடையில் பொறுப்புக்களை பகிர்ந்தளிப்பதன் மூலம் செயற்திட்டத்தின் சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு குழுக்களின் கூட்டங்களில் பயனுள்ள தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கு முடிந்திருக்கவில்லை.

(ஆ) 2016 யூலையில் ஆரம்பிக்கப்பட்ட கண்டியிலுள்ள கடுகஸ்தோட்ட – மடவல – டிகானா வீதி மற்றும் தர்மசோகா வீதி என்பவற்றின் மீள்நிர்மாண வேலைகள் ஒப்பந்ததாரர்களின் மந்தமான செயலாற்றல் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 27 சதவீதம் மற்றும் 09 சதவீத மெதுவான செயன்முன்னேற்றத்தைக் காட்டியிருந்தன. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட 02

கிலோமீற்றர்கள் நீளமான கண்டி நகரத்திலுள்ள நிலத்தடி வடிகாலமைப்பு முறையின் புனரமைப்பு வேலைகள் அத் திகதியிலுள்ளவாறு 25 சதவீத மெதுவான பௌதீக செயன்முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது.

(இ) செயற்திட்டத்தின் நிறுவன வலுப்படுத்தல் மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல் கூறின் கீழ் காலி மாநகர சபையின் பயன்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்வனவுகள் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டு கண்டி நகரத்தில் அமுல்ப்படுத்தப்பட்ட உப செயற்திட்டங்களின் கீழ் ரூபா 609.72 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 4.07 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 07 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்ததாரரின் மந்தமான செயலாற்றல் காரணமாக 2017 மார்ச் 31 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மேலும், ரூபா 2,690.11 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 17.96 மில்லியன் கிரயத்தில் கண்டி நகரத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட ஏனைய 07 உப செயற்திட்டங்கள் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்பு பெறப்படாததால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அவற்றின் மீது அறிமுகப்படுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 858.26 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 5.73 மில்லியன் கிரயத்தில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட புதிய 04 உப செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், கண்டி மற்றும் காலி நகரங்களில் புனரமைப்பு வேலைகளிற்காக ரூபா 22,020 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 147 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட 76 ஒப்பந்தங்களில் ரூபா 5,190 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 34.65 மில்லியன் பெறுமதியான 36 ஒப்பந்தங்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தன. பொதுவான அம்சமாக, ஒப்பந்ததாரர்களின் நிதி இயலுமையை கருத்திற்கொள்ளாமல் அவர்களை தெரிவு செய்தல், ஒப்பந்ததாரர்களால் வேலைக்கமர்த்தப்பட்ட தொழில்நுட்ப பதவியணியினர் போதாதிருத்தல், வடிவமைப்பு ஆலோசனையாளர்களால் தயாரிக்கப்பட்ட வடிவமைப்புக்களிலுள்ள பிழைகள், நிர்மாண வேலைகளின் மந்தமான செயலாற்றலிற்கு நேரடியாக தாக்கம்செலுத்தியிருந்த செயற்திட்டத்திடமிருந்து அறிவுறுத்தல்களை வழங்குவதிலுள்ள தாமதங்கள் போன்ற குறைபாடுகள் காரணமாக செயற்திட்டத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட நிர்மாண வேலைகள் மெதுவான செயன்முன்னேற்றத்தை பதிவுசெய்திருந்தது. இது தொடர்பில் மேலும் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரகாரம், இடைக்கால விலைப்பட்டியல்களின் பெறுமதி ஒப்பந்தப் பெறுமதியின் 05 சதவீதத்தை விடக் குறைவாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், மொத்த ஒப்பந்தப் பெறுமதிகளில் 05 சதவீதத்தை விடக் குறைவான கண்டியிலுள்ள தர்மசோகா வீதியின் புனரமைப்பு வேலைகள் மற்றும் மெட–எல பகுதியின் கபியன் (gabion) சுவர் நிர்மாணம் என்பவற்றுடன் தொடர்புடைய விலைப்பட்டியல்கள் உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகளை கருத்திற்கொள்ளாமல் கொடுப்பனவுகளிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்டத்தின் டுனுமடலவ தண்ணீர் சுத்திகரிப்புப் பொறியின் சிவில் நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்களின் மந்தமான செயன்முன்னேற்றத்தை ஆலோசனையாளர்கள் அறிக்கையிட்டிருந்த போதிலும் ஒப்பந்ததாரர்களின் செயலாற்றலை துரிதப்படுத்துவதற்கோ அல்லது ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒப்பந்ததாரர்களை முடிவுறுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கண்டி நகரத்தில் ஓதர்ஸ் டெக் (Author’s Deck) இன் நிர்மாணத்தில் ஈடுபட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து வேலைகளை பூர்த்தியாக்குவதிலுள்ள 09 மாதங்களான தாமதங்கள் மீது ரூபா 2.72 மில்லியன் தொகையான தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

ரூபா 888.67 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 6.16 மில்லியன் ஆரம்ப மீதி மற்றும் 2016 யூன் 10 இல் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,459.55 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் கட்டுநிதி உள்ளடங்கலாக விசேட (டொலர்) கணக்கில் காணப்பட்ட ரூபா 2,348.22 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 16.16 மில்லியன் செலவு மீதியில் ரூபா 1,177 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 8.07 மில்லியன் மாத்திரம் செயற்திட்டத்தின் உரிய கணக்கிலிருந்து மீளாய்வாண்டின் போது மீளப்பெறப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. ஆகையால், ரூபா 1,324.56 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 8.09 மில்லியன் மீதி நிதித் தேவைப்பாடுகளின் மந்தமான எதிர்வுகூறல் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விசேட (டொலர்) கணக்கில் பயன்படுத்தப்படாதிருந்தது.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மோட்டார் வாகனங்களை வாடகைக்கு எடுப்பதற்கான ஆகக்கூடிய எல்லை தொடர்பில் செயற்திட்டத்தால் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் பிரகாரம் மாதமொன்றிற்கு 2500 கிலோமீற்றர்கள் ஓடப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்ததுடன் மேலதிக கிலோமீற்றர்களுக்காக மேலதிகக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டியிருந்தது. மேலதிகமாக 157,052 கிலோமீற்றர்கள் ஓடியதற்காக செயற்திட்டத்தால் ரூபா 6.06 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் சில ஏனைய மோட்டார் வாகனங்கள் ஆகக்கூடிய எல்லைக்கு குறைவாக 27,220 கிலோமீற்றர்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

### 3.6 குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ரூபா 73.55 மில்லியன் கிரயத்தில் 2016 நவம்பரில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட 09 மோட்டார் வாகனங்கள் 2017 மார்ச் 31 வரை பயன்படுத்தப்படாமல் கண்டி மாநகர சபையின் வளாகத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 13 பதவிகளிற்கான 152 உத்தியோகத்தர்களை கொண்டிருந்த போதிலும் 02 ஆண்டுகளிற்கு மேலாக மேலதிக செயற்திட்டப் பணிப்பாளர், பிரதிச் செயற்திட்டப் பணிப்பாளர்களின் 07 முக்கிய பதவிகளிற்கான உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 75 உத்தியோகத்தர்களிற்கு காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மாதங்களிற்கு மேலாக உதவி செயற்திட்டப் பணிப்பாளர் பதவிக்கான 22 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துதலின் மெதுவான செயன்முன்னேற்றத்திற்கு மேற்குறிப்பிடப்பட்ட பதவியணிக் குறைவுகளானது பிரதானமாக செல்வாக்குச் செலுத்தியிருந்தது.

(ஆ) மேலும், செயற்திட்டமானது ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் நகரத் திட்டமிடல் நடவடிக்கைகளை கையாளுதல் மீது போதுமானளவு அனுபவங்களைக் கொண்டிராத 02 உதவிச் செயற்திட்டப் பணிப்பாளர்களை வேலையிலீடுபடுத்தியிருந்தது. மேலும், செயற்திட்டமானது ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களை ஒருங்கிணைத்தல் தொடர்பான பிரச்சனைகளை தீர்க்கும் வகையில் சமூக பாதுகாப்பு நோக்கங்களிற்காக பொருத்தமான தகமைகளுடனான உத்தியோகத்தர்களை வேலையிலீடுபடுத்தியிருக்கவில்லை.

(இ) செயற்திட்டமானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைக் கொண்டிராமல் 10 உள்ளூர் ஆலோசனையாளர்களிடமிருந்து சேவைகளைப் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 20.52 மில்லியன் படிகளைச் செலுத்தியிருந்தது.

**3.8 காணி சுவீகரிப்பு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் ஆரம்பத் திட்டங்களின் பிரகாரம் ரூபா 662 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 1,632 காணித்துண்டுகளை சுவீகரிப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் அதில் மீளாய்வாண்டு இறுதிவரை 1,267 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட்டிருந்தன. காணித்துண்டுகளின் சுவீகரிப்பில் காணப்பட்ட தாமதங்கள் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துதலின் மெதுவான செயன்முன்னேற்றத்திற்கு காரணமாகவிருந்தன.

(ஆ) ரூபா 378.46 மில்லியன் தொகையான சுவீகரிக்கப்பட்ட காணி மீதான மொத்த இழப்பீட்டுக் கிரயத்தில் ரூபா 83.08 மில்லியன் தொகை மாத்திரம் காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நியதிச்சட்ட கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது. காணி சுவீகரிப்பு மீள்குடியேற்றல் குழுவின் சிபாரிசுகளை அடிப்படையாகக்கொண்டு ரூபா 295.38 மில்லியன் மீதித் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 188.88 மில்லியன் கூட்டுத்தொகையான மேலதிகக் கொடுப்பனவுகள் சலுகை அடிப்படையில் இழப்பீட்டைப் பெற்றிருந்த அதே காணி உரிமையாளர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மேலதிகக் கொடுப்பனவுகளிற்கான காரணங்கள் கணக்காய்விற்காக விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.